DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **O.S :55/2022** | |
| Deposition of Witness | | | : | **வா.சா.3** | |
| Name | : | முருகேசன் | Occupation | : | மேஸ்திரி |
| Father's Name/ Husband | : | ராமசாமி | | | |
| Village | : | கும்பகோணம் | Age | : | 52 |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969). 27-01-2025

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இன்று நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறேன். எனக்கு வாதி சண்முகம், அவருடைய சகோதரர் செல்வ கணபதி ஆகியோரை தெரியும். செல்வகணபதி 5, 6 வருடங்ளுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருடைய மகன் பெயர். சோமசுந்தரம். அவரை தெரியும். வாதி சண்முகம், செல்வகணபதியை 30 வருடமாக தெரியும். வாதி குடியிருக்கும் வீட்டை நான் தான் மேஸ்திரியாக இருந்து கட்டிக்கொடுத்தேன். வாதி வீடு கட்டி 20, 21 வருடம் இருக்கும். வாதி வீடு கட்டிய விவரம் அவருடைய அண்ணன் செல்வகணபதிக்கு தெரியும். அவர் தான் பேசி வீடு கட்ட சொன்னார் . செல்வகணபதி மகன் சோமசுந்திரத்திற்கும் வீடு கட்டிய விவரம் தெரியும் . செல்வகணபதி உயிருடன் இருக்கும் வரை சண்முகம் வீட்டிற்கு முன்னால் இருக்கும் வீட்டில் குடியிருந்தார் . முன்னால் சிமெண்ட் சீட்டும், பின்னால் நாட்டு ஓடும் போட்ட வீடு அது. சண்முகம் வீடு கட்டும் வரை முன்னால் இருந்த வீட்டில் ஒரு ரூமில் இருந்தார் . அனைவரும் ஒன்றாக தான் சமைத்து சாப்பிட்டார்கள். சண்முகம் வீடு கட்டியதே தெரியாது என்று

சோமசுந்தரம் பொய் சொல்கிறார் என்றால் சரியல்ல . அவருக்கு தெரியும். சண்முகத்திற்கு கிழே மேல் 22 அடி தென் வடலாக 30 அடி வீடு கட்டி கொடுத்தேன். கிழே மேலாக 22 அடி போக 8 அடி உள்ளது. அதில் 3 அடி மாடி படிக்கட்டுக்கள் போட்டு கொடுத்திருக்கிறேன். கீழ் தளம் கட்டி 5 வருடத்திற்கு பின் மேல் தளம் கட்டி கொடுத்தேன். மேல் தளத்திற்கு போக தான் மாடி படி 3 அடி போட்டு கொடுத்தேன். அவர் அண்ணன் தான் கீழ புறமாக மாடி போட சொன்னார் . செல்வகணபதிக்கு வீட்டிற்குள் ஒரு டாய்லெட்டும் , வெளியே ஒன்றும் உள்ளது. சண்முகம் வீட்டிற்கு கீழே ஒன்றும் , மாடியில் ஒன்றும் உள்ளது . சண்முகமோ, செல்வகணபதியோ Drainage connection முன்சிபாலிட்டியில் வாங்கவில்லை. கொல்லபக்கம் இருவருக்கும் செப்டிக் டேக் போட்டு கொடுத்திருக்கிறேன் . அந்த செப்டிக் டேக்கிற்கான பைப் லைன் பொது பாதை வழியாக போகிறது . இருவருக்குமான குடிநீர் இணைப்பு பொது பாதை வழியாக தான் போகிறது. மாடி படி இடித்தால் கட்டிடத்திற்கு டேமேஜ் ஆகும். அதை கட்டியவர் என்ற முறையில் நான் சொல்கிறேன். தெருவில் இருந்து கடைசி கொல்லை வரை போவதற்கு பாதை தெளிவாக உள்ளது.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.